**ஹங்குரன்கெத்த பிரதேச சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் பணத்தில் ரூபா 15,660,211 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,810,968 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன் மூலதனம் ரூபா 849,243 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 121,102 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் ரூபா 83,587 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் மீதி என்பன நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(இ) 109 ஆம் இலக்க மூலதன செலவின விடயத்திற்கு பேரேட்டுக் கணக்கில் ரூபா 695,289 கூட்டுத்தொகை ரூபா 860,289 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஆண்டின் மூலதனச் செலவினம் ரூபா 165,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் நன்கொடையாகக் கிடைத்து களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 96,579 பெறுமதியான 213 கழிவுப்பொருள் கூடைகளின் பெறுமதி கிடைத்த நன்கொடைகளில் கைவிடப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் படி ரூபா 165,281 கூட்டுத்தொகையான பெறுவனவுகளையும், ரூபா 15,500 தொகையான செலவினங்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும்

செலவினங்கள் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காசேட்டு மீதி அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற ரூபா 25,574 தொகையான இனங்காணப்படாத வேறுபாடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நெனசல பாடநெறிக்காக கிடைத்த ரூபா 51,900 தொகையான தேறிய வருமானம் ரூபா 45,357 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காரணத்தால் வருமானம் ரூபா 6,543 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2013 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்படவேண்டிய சபைக்குச் சொந்தமான 44 நடைமுறையல்லாச் சொத்து விடயங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் ரூபா 4,129,391 கூட்டுத்தொகையான கணக்குகளுக்குரிய உபயோகப் பதிவேடுகளின் படி ரூபா 3,194,278 கூட்டுத்தொகையான மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 935,113 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,154,565 ஆக இருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்தவேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,753,606 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 94,890,328 தொகையான கணக்கு மீதி தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 04 ஆம் பிரிவுகள் | பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்ட பின் இடமாற்றம் பெற்றுச் செல்லல், சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 12 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 170,092 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 12(1) ஏ பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்களைப் பரீட்சித்து அவற்றைத் தடுப்பதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,390,754 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,426,613 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

2013.12.31 இல் நிலுவை

| வருமான விடயம் | 2013.01.01 இல் நிலுவை | 2013.01.01 இல் நிலுவையில் அறவீடு | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடலில் அறவிடப்பட்டவை | 2013.01.01 இல் காணப்பட்ட நிலுவை | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 736,527 | 363,158 | 1,184,182 | 537,630 | 373,369 | 646,552 | 1,019,921 |
| வாடகை | 1,097,084 | 315,630 | 1,936,652 | 956,108 | 781,454 | 980,544 | 1,761,998 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 1,345,040 | 1,358,790 | - | 13,750 | 13,750 |
| ஏனையவை | 891,392 | 616,040 | 2,150,594 | 1,738,218 | 275,352 | 412,376 | 687,728 |

### 2.2.2 ஆதன வரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,019,921 தொகையான அறவிடவேண்டிய ஆதனவரி, காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 33 ஆவது விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான 06 கடைகள் மற்றும் வாராந்த சந்தைக் கட்டிடத்தின் கீழ் மற்றும் மேல் மாடிகளை வாடகைக்கு வழங்கியமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 663,692 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் ரிகில்லகஸ்கட மற்றும் ஹேவாஹெட்ட நகரத்தில் 07 கடைகளிலிருந்து ரூபா 76,540 தொகையும் அறவிடவேண்டியிருந்தது.

### 2.2.4 அனுமதிபத்திரக் கட்டணம்

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 59 ஆவது விதியின் படி ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் பிரதேச சபையினால் பிரதேசத்தில் மெய்மையாய்வு மேற்கொண்டு சகல தொழில்முயற்சிகள், வியாபாரங்களும் அனுமதிப்பத்திர பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு அனுமதிப்பத்திக் கட்டணம் அறவிடவேண்டியிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது தெரிவுப் பரிசோதனையின்படி 46 நிறுவனங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீர்க் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 755,679 ஆக இருந்தது. நிதிக் கட்டணம் செலுத்தாத பாவனையாளர்களிடமிருந்து கட்டணத்தை அறவிடுவதற்கு முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,758,336 தொகையான முத்திரைக் கட்டணமும் ரூபா 480,750 தொகையான நீதிமன்றத் தண்டப்பணமும் அறவிடவேண்டியிருந்தன.

### 2.2.7 விளம்பர அறிவித்தல் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 22(அ) மற்றும் 122-126 ஆம் பிரிவுகளின் அதிகாரங்களின் பிரகாரமும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் IV (அ) உப விதியின் 39 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் படியும் ஒரு சதுர அடிக்கு ரூபா 65 வீதம் விளம்பர அறிவித்தல்களிலிருந்து கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் ரிகில்லகஸ்கட நகரத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 09 விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 91,148 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 ஏனைய வருமானம்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் சிறிய அளவிலான 03 நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் 06 தொலைபேசிக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை கண்காணிப்பதற்காக முறையான உப விதியொன்றை விதித்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எசல களியாட்ட வரி அல்லது ஏனைய அடிப்படையில் வழங்கப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பான திட்டம் மற்றும் வருமானம் அறவிடும் அடிப்படை தொடர்பாகவும் அறவிடப்பட்ட வருமானம் தொடர்பான அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் எசல பண்டிகைக்காக பிரதேச சபையின் ஆதனங்களை வழங்கும் போது இணங்கப்பட்ட வருமானத்தை முறையாக அறவிடாமையினால் ரூபா 39,150 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் 2011 ஒக்தோபர் 06 ஆந் திகதிய உப விதியின் பிரகாரம் வாடகை வாகனங்களை நிறுத்துவதற்காக அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படாமையின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 424 முச்சக்கர வண்டிகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 508,800 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்காக புதிதாக முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.9 சந்தை வாடகை

2013 ஆம் ஆண்டிற்காக ஹேவாஹெட்ட ரஹதுன்கொடை சந்தையை வாடகைக்கு வழங்கும் போது ரூபா 680,000 தொகைக்கு கேள்வியைச் சமர்ப்பித்த முதலாவது கேள்விதாரர் அரசாங்க ஊழியர் என்பதற்காக நிராகரிக்கப்பட்டு ரூபா 677,000 தொகையில் இரண்டாவது கூடிய கேள்வித் தொகை சமர்ப்பித்த கேள்விதாரருக்கும் கையளிக்கப்படாது 2013 மார்ச் 12 இல் மீளவும் கேள்வி கோரப்பட்டு அந்த சந்தர்ப்பத்தில் ரூபா 575,000 இற்கு ஆகக் கூடிய கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்படாமல் ரூபா 524,000 இற்கு சமர்ப்பித்த தொகையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றலில் காணப்படுகின்ற செயல்முன்னேற்ற அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானமொன்றை உழைக்கக்கூடியதாக இருந்தும் சபைக்குச் சொந்தமான 05 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் கோனகன்தென்ன உப அலுவலகக் கட்டிடமும் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஹங்குரன்கெத்த நகரில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டிடம் அமைந்துள்ள காணியை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்தக் கட்டிடத்தில் உள்ள கடைகள் வாடகையாளரினால் பல வருடகாலம் முதல் உரிமை கோரிய போதிலும் சபையுடன் எந்த உடன்படிக்கையும் இல்லாதிருந்தும் அனுமதியற்ற வகையில் நீண்டகாலத்திலிருந்து உரிமை கோரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையின் தண்ணீர் பவுசர் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 1000 லீற்றரிலான 05 நீர் தாங்கிகள் சபையின் பாவனையிலில்லாது முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 6,645,626 தொகை செலவில் 02 கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது இந்த 02 நிலையங்களும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பசளை உற்பத்தியோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து 225 கழிவுப் பொருள் சேகரிக்கும் பாத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 ஒக்தோபர் 22 ஆந் திகதிய 4/4/450 -11 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பாத்திரங்களை விநியோகிப்பதற்குரிய அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. பாத்திர விநியோகம் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கிடைத்த வருமானமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட கடிதத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பாத்திரங்களை வழங்கியதால் பெறப்படுகின்ற பணத்திலிருந்து சுழற்சி நிதிய ஒதுக்கத்திலிருந்து ஏனைய வீடுகளுக்காகவும் பாத்திரங்களை வழங்க வேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்தும் அந்த செயற்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 07 வருமான விடயங்களில் 12 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையும், 08 செலவின விடயங்களில் 08 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்